# 12th History Book Back Questions TM - New Book

## Do You Know Box Content

## Download Winmeen App

### [1] இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி

**தேசியம்:** விரிவான தளத்தில் தேசியமென்பது ஒருநாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் எனப் பொருள்கொள்ளப்படுகிறது. அது தனது நாட்டை ஏனைய நாடுகளைக்காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துபார்த்து அல்லது ஏனையநாடுகளுகளுக்குப் போட்டியாக தனது நாட்டின்பண்பாடும் மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு தேசிய உணர்வு அல்லது மனப்போக்காகும்.

**ஒப்பந்தத்தொழிலாளர்முறை:** உழைப்புடன் கூடிய கடுங்காவல் தண்டனை போன்ற இவ்வொப்பந்தக்கூலித் தொழிலாளர் முறையின் கீழ் தொழிலாளர்கள் ஐந்து வருடகாலத்திற்கு ஒப்பந்தம்செய்யப்பட்டனர். இறுதியில் அவர்கள் குறைந்த அளவு கூலியைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பலாம். வறுமையில் உழன்ற பல விவசாயிகளும் நெசவாளர்களும் ஓரளவுப்பணம் சம்பாதிக்கும் நம்பிக்கையுடன்சென்றனர். ஆனால் அது அடிமைத்தொழிலை விடவும் மோசமாக அமைந்தது. வறுமையில் வாடிய ஏழைத்தொழிலாளர்களைச் சூழ்ச்சியின் மூலமோ அல்லது கடத்தியோ கொண்டு வர அரசு தனது முகவர்களை (கங்காணிகள்) அனுமதித்தது. நீண்ட கடல் பயணத்தில் தொழிலாளர்கள் பெருந்துயரங்களுக்குள்ளாயினர். பலர் வழியிலேயேஇறந்தனர். 1856–57 இல் கல்கத்தாவிலிருந்து டிரினிடாட் சென்ற கப்பலில் பயணம் செய்த ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் இறப்பு விகிதம் பின்வருமாறு: ஆண்களில் 12.3 விழுக்காட்டினரும், பெண்களில் 18.5 விழுக்காட்டினரும், 28% சிறுவர்களும், 36% சிறுமிகளும், 55% குழந்தைகளும் இறந்துவிட்டனர்.

T.B.மெக்காலே 1834 முதல் 1838 வரை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக்குழுவில் முதல் சட்ட உறுப்பினராக அங்கம் வகித்தவர். மெக்காலே இந்தியாவிற்கு வருவதற்கு முன்னதாக 1823ல் பொதுக்கல்விக்கான பொதுக்குழு உருவாக்கப்பட்டது. கல்விதொடர்பாகவும், எம்மொழியில் கல்விகற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கிழக்கிந்தியக்கம்பெனிக்கு வழிகாட்டுவது இக்குழுவின்பொறுப்பாகும். இவ்வமைப்புப்பின்னர் இரண்டு குழுக்களாகப் பிரிந்தது. கீழ்த்திசைக்குழுவானது கல்விபிராந்தியமொழிகளில் கற்பிக்கப்படவேண்டும் எனும் கருத்தை முன்வைத்தது. ஆங்கில மரபுக்குழு மேலைக்கல்வியானது ஆங்கிலமொழிவழியில் கற்பிக்கப்படவேண்டும் எனும் கருத்தை முன்வைத்தது.

மெக்காலே ஆங்கிலமரபுக்குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார். 1835இல் அவர்தனது புகழ்பெற்ற "இந்தியக்கல்வி குறித்த குறிப்புகள் (*Minute on Indian Education*)" எனும் குறிப்புகளை வெளியிட்டார். இக்குறிப்புகளில் ஆங்கிலவழியில் மேற்கத்தியக்கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாகவாதிட்டார். ரத்தத்திலும், நிறத்திலும்இந்தியராகவும்விருப்பத்தில், கருத்தில், ஒழுக்கநெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்கும் ஒருமக்கள் பிரிவினரை இந்தியாவிற்குள்ளே உருவாக்க அவர் விரும்பியதே அவர் ஆங்கில மரபுக்குழுவை ஆதரித்ததன் காரணமாகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?

அ) 1915

ஆ) 1916

இ) 1917

ஈ) 1918

2. இந்தியாவில் ஆங்கிலக்கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

அ) 1825

ஆ) 1835

இ) 1845

ஈ) 1855

3. மாறுபட்ட ஒன்றைத் தேர்வுசெய்க.

அ) வில்லியம் ஜோன்ஸ்

ஆ) சார்லஸ் வில்கின்ஸ்

இ) மாக்ஸ் முல்லர்

ஈ) அரவிந்த் கோஷ்

4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" – எனக் கூறியவர்

அ) பாலகங்காதரதிலகர்

ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) சுபாஷ்சந்திரபோஸ்

ஈ) பாரதியார்

5. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வுசெய்க.

அ) பாலகங்காதர திலகர் – 1. இந்தியாவின்குரல்

ஆ) தாதாபாய் நௌரோஜி – 2. மெட்ராஸ் டைம்ஸ்

இ) மெக்காலே – 3. கேசரி

ஈ) வில்லியம் டிக்பை – 4. இந்தியக்கல்வி குறித்த குறிப்புகள்

அ) 2, 4,1, 3

ஆ) 3, 1, 4, 2

இ) 1, 3, 2, 4

ஈ) 4, 2, 3, 1

6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் – 1843

ஆ) அடிமை முறை ஒழிப்பு – 1859

இ) சென்னைவாசிகள் சங்கம் – 1852

winmeen.com

ஈ) இண்டிகோ கலகம் – 1835

7. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையைத் தேர்வு செய்க.

i) கிழக்கிந்தியக் கழகம்

ii) சென்னை மகாஜன சங்கம்

iii) சென்னை வாசிகள் சங்கம்

iv) இந்தியச் சங்கம்

அ) ii, i, iii, iv

ஆ) ii, iii, i, iv

இ) iii, iv, i, ii

ஈ) iii, iv, ii, i

8. இந்திய தேசிய காங்கிரசைநிறுவியவர்

அ) சுபாஷ்சந்திரபோஸ்

ஆ) காந்தியடிகள்

இ) A.O. ஹியூம்

ஈ) பாலகங்காதர திலகர்

9. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்

அ) சுரேந்திரநாத் பானர்ஜி

ஆ) பத்ருதீன் தியாப்ஜி

இ) A.O. ஹியூம்

ஈ) W.C. பானர்ஜி

10. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" எனஅழைக்கப்படுபவர்.

அ) பாலகங்காதர திலகர்

ஆ) M.K. காந்தி

இ) தாதாபாய் நௌரோஜி

ஈ) சுபாஷ்சந்திரபோஸ்

11. "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்" *(Poverty and Un-British Rule in India)* என்ற நூலை எழுதியவர்

அ) பாலகங்காதர திலகர்

ஆ) கோபாலகிருஷ்ண கோகலே

இ) தாதாபாய் நௌரோஜி

ஈ) எம்.ஜி.ரானடே

12. **கூற்று:** ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக்கொள்கையைப் பின்பற்றியது.

**காரணம்:** இங்கிலாந்தின் தடையற்ற வணிகக்கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

இ) கூற்று சரி; காரணம் தவறு

ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

13. ஒரிசா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை/எது?

**கூற்று 1:** 1866ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.

**கூற்று 2:** பஞ்சகாலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.

**கூற்று 3:** ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ள தூண்டியது.

அ) 1, 2

ஆ) 1, 3

இ) இவற்றுள் எதுவுமில்லை

ஈ) இவை அனைத்தும்

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. அ) 1915 2. ஆ) 1835 3. ஈ) அரவிந்த் கோஷ் 4. அ) பாலகங்காதர திலகர் 5. ஆ) 3, 1, 4, 2 6. இ) சென்னைவாசிகள் சங்கம் – 1852 7. இ) iii, iv, i, ii 8. இ) A.O. ஹியூம் 9. ஈ) W.C. பானர்ஜி 10. இ) தாதாபாய் நௌரோஜி 11. இ) தாதாபாய் நௌரோஜி 12. இ) கூற்று சரி; காரணம் தவறு 13. ஈ) இவை அனைத்தும்

## [2] தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

**சுதேசி சிந்தனையின் பரிணாம வளர்ச்சி**

விடுதலைப் போராட்டத்தின் போது சுதேசி இயக்கம் என்ற எண்ணம் முதன் முதலாக 1905 இல் ஒரு சில காங்கிரஸ் தலைவர்களாலும், பின்னர் 1920 களில் மகாத்மா காந்தியடிகளின் தலைமையிலும் ஒரு தத்துவமானது.

'சுதேசி' என்பதன் பொருள். 'ஒருவரது சொந்தநாடு' என்பதாகும். இத்தத்துவத்தின் தோற்றமானது 1872இல் பூனாவில் மகாதேவ் கோவிந்த்ரானடே தனது தொடர் சொற்பொழிவுகளின் மூலம் இச்சிந்தனையைப் பிரபலப்படுத்தியதிலிருந்துத் தொடங்குகிறது. ரானடேயின் கருத்துப்படி ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு அப்பொருட்களின் பயன்பாடு குறைவான மன நிறைவைக்கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

1920களில் காந்தியடிகள் இதை அனைத்து இந்தியர்களும் தாங்கள் பிறந்தநாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமைகளோடு இணைந்துச் சுதேசி சிந்தனைக்குப் புதிய பொருளைக் கொடுத்தார்.



winmeen.com

காந்தியடிகளைப் பொருத்தமட்டில் சுதேசி என்பது ஒருவர் தனது சொந்தநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மட்டும் பயன்படுத்துவது என்பது மட்டுமல்ல. அவர் பின்வரும் வார்த்தைகளில் சுதேசியை விளக்குகிறார். சுதேசி என்பது நமக்குள்ளிக்கும் ஆன்மபலம் அது வெகுதொலைவிலிருந்து கிடைப்பனவற்றை ஒதுக்கி வைத்து நமக்கு வெகு அருகேயுள்ள சுற்றுப்புறத்திலிருந்து கிடைக்கும் பயன்களையும் சேவைகளையும் பயன்படுத்தும் வண்ணம் இங்கு உள்ளவர்களால் தயார் செய்யப்படும் பொருட்களை மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும். அப்படியான தொழில்கள் எங்கு தேவைப்படுகின்றனவோ அங்கே அவைகள் திறம்படவும் முழுமையாகவும் செயல்படச் சேவை செய்ய வேண்டும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

வட்டாரமொழியில் கல்வி, எனும் கருத்து சுதேசி இயக்கத்திற்கு வெகு முன்னரே 1902 இல் சதீஷ் சந்திர முகர்ஜியால் விடிவெள்ளிக்கழகம் (Dawn Society) நிறுவப்பட்ட போதே உருவாகிவிட்டது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிரதேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?

அ) அரவிந்த் கோஷ்

ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) ஃபெரோஸ்ஷா மேத்தா

ஈ) லாலாலஜபதி ராய்

2. பின்வரும் கூற்றுகளைக் கான்க.

i) 1905இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப்பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

ii) 1905இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார்.

iii) 1905 ஆகஸ்ட் 7இல் கல்கத்தா நகர அரங்கில் (Town Hall) நடைபெற்ற கூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேற்கண்ட கூற்றுக்களில் எது/எவை சரியானவை.

அ) (i) மட்டும்

ஆ) (i) மற்றும் (iii) மட்டும்

இ) (i) மற்றும் (ii) மட்டும்

ஈ) மேற்கண்ட அனைத்தும்

3. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத்தேர்க.

| | |
|---|---|
| அ) இந்தியப்பத்திரிக்கைச் சட்டம், 1910 | 1. சுயஆட்சி |
| ஆ) விடிவெள்ளிக் கழகம் | 2. சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி |
| இ) சுயராஜ்யம் | 3. தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது |

ஈ) சுதேசி 4. கல்விக்கான தேசியக் கழகம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 1 | 2 | 4 | 3 |

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

அ) பங்கிம்சந்திரசாட்டர்ஜி – ஆனந்த மடம்

ஆ) G. சுப்ரமணியம் – விடிவெள்ளிக் கழகம்

இ) மிண்டோ பிரபு – பல்கலைக்கழகச் சட்டம், 1904

ஈ) தீவிர தேசியவாத மையம் – சென்னை

5. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்

அ) புலின் பிஹாரி தாஸ்

ஆ) ஹேமச் சந்திர கானுங்கோ

இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பர்ந்தர் குமார் கோஷ்

ஈ) குதிரம்போஷ் மற்றும் பிரஃபுல்லாசாக்கி

6. **கூற்று:** 1905 அக்டோபர்16 துக்கநாளாக அனுசரிக்கப்பட்டது.

**காரணம்:** மேற்படி நாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

7. **கூற்று** : வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

**காரணம்** : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர்எ திர்த்தார்.

அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

8. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?

அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.

ஆ) பாரதி திலகரின் *Tenets of New Party* என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.

winmeen.com

இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.

ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. ஈ) லாலா லஜபதி ராய் 2. ஈ) மேற்கண்ட அனைத்தும் 3. இ) 3 4 1 2 4. அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்தமடம் 5. இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பர்ந்தர் குமார்கோஷ் 6. அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது 7. அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது 8. இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.

## [3] இந்திய விடுதலைப் போரில் முதல் உலகப்போரின் தாக்கம்

**தன்னாட்சி:** மத்திய அல்லது பிரதேச அரசிடமிருந்து அதனைச் சார்ந்த அரசியல் பகுதிகளுக்கு, அங்கு வாழும் மக்கள் அதற்கு அரசியல் ரீதியாக விசுவாசமாக இருப்பார்கள் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும் தன்னாட்சி அதிகாரத்தைக் குறிக்கிறது. பழங்கால ரோமானிய அரசிலும், நவீன ஆங்கிலேய அரசிலும் இது பொதுப்படையான அம்சமாக இருந்தது. 1880களில் அயர்லாந்தில் தன்னாட்சி இயக்கம் முடுக்கம் பெற்றதை அடுத்து அயர்லாந்து அரசு சட்டத்தின் (1920) கீழ் வட அயர்லாந்து ஆறு நாடுகளிலும் பிறகு தெற்கிலும் ஆங்கிலோ–அயர்லாந்து ஒப்பந்தத்தின் (1921) கீழ் எஞ்சிய 26 நாடுகளிலும் தன்னாட்சி அமையப்பெற்றது.

பிரிட்டிஷ் அரசின் கீழ் இந்தியா தன்னாட்சி பெறுவது அல்லது கனடா, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் வழியில் தன்னாட்சிப் பகுதித் (டொமினியன்) தகுதியைப் பெறுவது ஆகியவற்றுக்காகப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோருவதற்காக இந்திய காமன்வெல்த் லீக் என்று தன்னாட்சி இயக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1929ல் இந்திய லீக் என்று வி.கே.கிருஷ்ண மேனன் மாற்றம் செய்தார்.

சோஹன் சிங் பக்னாவைத் தலைவராகக் கொண்டு பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பை சான்பிரான்சிஸ்கோவில் வசித்து வந்த லாலாஹர்தயாள் 1913இல் நிறுவினார். இந்த அமைப்பு கதார் கட்சி என்று அழைக்கப்பட்டது. (உருது மொழியில் கதார் என்றால் கிளர்ச்சி என்று பொருள்). அமெரிக்கா மற்றும் கனடாவில் குடியேறிய சீக்கியர்களே பெரும்பாலும் இந்தக் கட்சியில் இடம் பெற்றிருந்தனர். 'கதார்' என்ற பத்திரிகையையும் இக்கட்சி வெளியிட்டது. 1913 நவம்பர் முதல் தேதி சான்பிரான்சிஸ்கோவில் இது பதிப்பிக்கப்பட்டு வெளியானது. பின்னர் உருது, பஞ்சாபி, இந்தி மற்றும் இதர மொழிகளிலும் அதுவெளியானது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கதார் இயக்கம் மிக முக்கிய அத்தியாயமாகும். கோமகடமரு (Comagatamaru) என்று பெயரிடப்பட்ட கப்பல் இந்தியாவில் இருந்து குடியேறியவர்களுடன் கனடாவில் இருந்து திரும்பியது. இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் ஏற்பட்ட மோதலில் அந்தக்கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர். இந்த நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

தென்னாப்பிரிக்காவில் ஆற்றிய மனிதாபிமானப் பணிகளுக்காக காந்தியடிகளுக்கு கெய்சர்–இ–ஹிந்த் தங்கப் பதக்கம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. 1906இல் ஆம்புலன்ஸ் படையில் இந்திய ஆர்வலர்களின் ஒரு அதிகாரியாகச் செயல்பட்ட அவரது சேவைகளைப் பாராட்டி ஜுலு போர் வெள்ளிப்பதக்கம் காந்தியடிகளுக்கு வழங்கப்பட்டது. 1899 – 1900களில் போயர் போரின் போது தூக்குபடுக்கை (Stretcher) கொண்டு

செல்வோர் படையில் இந்திய ஆர்வலர்களின் துணைக் கண்காணிப்பாளராக சேவை புரிந்தமைக்காக போயர் போர் வெள்ளிப் பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது. கிலாபத் இயக்கத்தின் தொடர்பில் ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கிய போது, அனைத்துப் பதக்கங்களையும் திரும்ப ஒப்படைத்த அவர் இவ்வாறு தெரிவித்தார். "கடந்த ஒரு மாத காலமாக நடந்த நிகழ்வுகளைப் பார்க்கும் போது கிலாபத் இயக்க விஷயத்தில் ஏகாதிபத்திய அரசு நேர்மையற்ற, நியாயமற்ற வகையிலும் மற்றும் கிரிமினல் போலவும் நடந்து கொண்டதுடன், தங்கள் நேர்மையற்றத் தன்மையைப் பாதுகாக்கத் தவறுக்கு மேல் தவறு செய்தன. இத்தகைய அரசு மீதான மதிப்பையோ அல்லது அன்பையோ என்னால் இருப்பு வைக்க இயலவில்லை.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?

அ) சி.ஆர்.தாஸ்

ஆ) அன்னி பெசண்ட்

இ) பி.பி.வாடியா

ஈ) எச்.எஸ். ஆல்காட்

2. பின்வருவனவற்றுள் அன்னிபெசண்ட் பற்றிய சரியான கூற்று எது?

1. கர்னல் எச்.எஸ். ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலகளாவிய தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. 1914 இல் அவர் காமன் வீல் என்ற வாராந்திரியை தொடங்கினார்.

3. 1915ஆம் ஆண்டு "How India wrought for Freedom" என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார்.

அ) 1 மற்றும் 2

ஆ) 2 மற்றும் 3

இ) 1 மற்றும் 3

ஈ) 1, 2 மற்றும் 3

3. **கூற்று:** ஜின்னாவை "இந்து–முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.

**காரணம்:** லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம்.

இ) கூற்று தவறு, காரணம் சரி.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

4. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?

அ) மகாத்மா காந்தியடிகள்

ஆ) மதன் மோகன் மாளவியா

இ) திலகர்

ஈ) பி.பி. வாடியா

5. 1916ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்

அ) முஸ்லீம் லீக் எழுச்சி.

ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு.

இ) முஸ்லீம் லீக்கின் தனித் தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.

ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறைபோக்கு.

6. பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.

அ) கதார் கட்சி – i) 1916

ஆ) நியூ இந்தியா – ii) 1913

இ) தன்னாட்சி இயக்கம் – iii) 1909

ஈ) மிண்டோ–மார்லி சீர்திருத்தம் – iv) 1915

அ) ii, iv, i, iii

ஆ) iv, i, ii, iii

இ) i, iv, iii, ii

ஈ) ii, iii, iv, i

7. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்

அ) லாலா லஜபதி ராய்

ஆ) வேலண்டைன் சிரோல்

இ) திலகர்

ஈ) அன்னி பெசண்ட்

8. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?

அ) லாலா லஜபதி ராய்

ஆ) ஏ.சி. மஜும்தார்

இ) லாலா ஹர்தயால்

ஈ) சங்கர் லால் பாங்கர்

9. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல்தலைவர் யார்?

அ) பி.பி. வாடியா

ஆ) ஜவஹர்லால் நேரு

இ) லாலா லஜபதி ராய்

ஈ) சி.ஆர். தாஸ்

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆ) அன்னிபெசண்ட் 2. ஈ) 1, 2 மற்றும் 3 3. ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம் 4. ஆ) மதன் மோகன் மாளவியா 5. இ)முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. 6. அ) ii, iv, i, iii 7. ஆ) வேலண்டைன் சிரோல் 8. இ) லாலா ஹர்தயால் 9. இ) லாலா லஜபதி ராய்

**[4] காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்**

பல்வேறு சாதி, பிரதேசங்கள், மதங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்க இந்திய பணியாளர் சங்கத்தை கோபால கிருஷ்ண கோகலே 1905 இல் நிறுவினார். பின் தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நாட்டின் முதலாவது மதச்சார்பற்ற அமைப்பு இதுவாகும். நிவாரணப்பணி, கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூகக்கடமைகளில் உறுப்பினர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஐந்தாண்டு காலத்துக்கு பயிர்சி பெற வேண்டிய உறுப்பினர்கள் குறைவான சம்பளத்துக்குப் பணியாற்ற ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த அமைப்புக்குத் தலைமையகம் மகாராஷ்டிராவின் பூனாவிலும், சென்னை (மதராஸ்), மும்பை (பம்பாய்), அலகாபாத் மற்றும் நாக்பூரில் முக்கிய கிளைகளும் இருந்தன.

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு இரவீந்திரநாத்தாகூர் தனது அரசப்பட்டத்தை உடனடியாகத் துறந்தார். 1919 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி அரசப் பிரதிநிதிக்கு (வைசிராய்) அனுப்பிய எதிர்ப்புக் கடிதத்தில் தாகூர் இவ்வாறு எழுதினார். "இணக்கமற்ற சூழல் நிலவும் வேளையில் அவமானத்தின் சின்னமாக இந்த மதிப்புக்குரிய பட்டம் திகழ்கிறது. மனிதர்களாகக் கூடக் கருத முடியாத நிலையில் மதிப்பிழந்து போன எனது நாட்டு மக்களுக்கு ஆதரவாக எனது நான் மேற்கொள்ளும் செயலாக, எனக்கு வழங்கப்பட அனைத்து சிறப்புப் பட்டங்களையும் திரும்ப ஒப்படைக்கிறேன்".

கால்சா ஆதரவற்றோர் காப்பகத்தில் வளர்க்கப்பட்ட சீக்கியபதின் பருவ இளைஞரான உதம்சிங் இந்தநிகழ்வை தனது கண்களால் கண்டார். ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குப் பழிதீர்க்கும் விதமாக 1940 மார்ச் 30 இல் லண்டனின் காக்ஸ்டன் அரங்கில் மைக்கேல் ஓ டையரை உதம்சிங் படுகொலை செய்தார். லண்டனின் பெண்டோன்வில்லே சிறையில் உதம்சிங் தூக்கிலிடப்பட்டார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?

அ) திலகர்

ஆ) கோகலே

இ) W.C. பானர்ஜி

ஈ) M.G.ரானடே

2. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்

அ) கேதா

ஆ) தண்டி

இ) சம்பரான்

ஈ) பர்தோலி

3. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது?

அ) சைமன்குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.

ஆ) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை.

இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம் பெறவில்லை.

ஈ) அது முழுச் சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

4. இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது?

அ) டிசம்பர் 31, 1929

ஆ) மார்ச் 12, 1930

இ) ஜனவரி 26, 1930

ஈ) ஜனவரி 26, 1931

5. 1923இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் –ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?

அ) சுயராஜ்ய கட்சி

ஆ) கதார் கட்சி

இ) சுதந்திர கட்சி

ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

6. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | |
|---|---|
| அ) நாமசூத்ரா இயக்கம் | 1. வட மேற்கு இந்தியா |
| ஆ) ஆதிதர்ம இயக்கம் | 2. தென்னிந்தியா |
| இ) சத்யசோதக் இயக்கம் | 3. கிழக்கிந்தியா |
| ஈ) திராவிட இயக்கம் | 4. மேற்கு இந்தியா |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

7. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் கால வரிசைப்படுத்துக.

1) அமிர்தசரஸ்நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.

2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது.

3) சௌரி சௌராவன் முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ளவழிவகுத்தது.

4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.

அ) 2, 1, 4, 3

ஆ) 1, 3, 2, 4

இ) 2, 4, 1, 3

8. பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?

அ) பஞ்சாப் துணை ஆளுநர் 1. ரெஜினால்டு டையர்

ஆ) தலித்–பகுஜன் இயக்கம் 2. டாக்டர். அம்பேத்கர்

இ) சுயமரியாதை இயக்கம் 3. ஈ.வெ.ரா. பெரியார்

ஈ) சத்தியாகிரக சபை 4. ரௌலட் சட்டம்

9. பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

i) கேதா சத்தியாகிரகம்

ii) சம்பரான் இயக்கம்

iii) பிராமணரல்லாதார் இயக்கம்

iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்

அ) ii, iii, i, iv

ஆ) iii, ii, i, iv

இ) ii, i, iv, iii

ஈ) ii, i, iii, iv

10. பின்வருவனவற்றுள் எது/எவை சரியானவை அல்ல.

i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்.

ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்.

iii) சைமன் குழுவினை முஸ்லீம் லீக் வரவேற்றது.

iv) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார்.

அ) i

ஆ) I மற்றும் iv

இ) ii மற்றும் iii

ஈ) iii மட்டும்

winmeen.com

11. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.

அ) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்.

ஆ) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்.

இ) உண்ணா விரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்

ஈ) அரசுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபடுதல்.

அ) அ மற்றும் ஆ

ஆ) ஆ மற்றும் இ

இ) அ மற்றும் ஈ

ஈ) இ மற்றும் ஈ

12. **கூற்று:** பி.ஆர்.அம்பேத்கர் மஹத் சத்தியா கிரகத்தைத் தொடங்கினார்.

**காரணம்:** அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.

அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று சரி ,காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

13. **கூற்று:** 1919 இல் இந்தியக் கவுன்சில் சட்டம் மற்றும் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

**காரணம்:** இது மிதவாத தேசியவாதிகளை அரவணைத்து தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்தும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

14. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்யகட்சியுடன் தொடர்பில்லாத தலைவர் யார்?

அ) இராஜாஜி

ஆ) சித்தரஞ்சன் தாஸ்

இ) மோதிலால் நேரு

ஈ) சத்யமூர்த்தி

15. காந்தியடிகளின் தண்டியாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு

அ) ஏப்ரல் 6, 1930

ஆ) மார்ச் 6, 1930

இ) ஏப்ரல் 4, 1939

ஈ) மார்ச் 4, 1930

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆ) கோகலே 2. இ) சம்பரான் 3. இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம் பெறவில்லை. 4. அ) டிசம்பர் 31, 1929 5. அ) சுயராஜ்யகட்சி 6. அ)3 1 4 2 7. அ) 2, 1, 4, 3 8. அ) பஞ்சாப் துணை ஆளுநர் 1. ரெஜினால்டு டையர் 9. ஈ) ii, i, iii, iv 10. ஈ) iii மட்டும் 11. அ) அ மற்றும் ஆ 12. இ) கூற்று சரி, காரணம் தவறு 13. அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது. 14. அ) இராஜாஜி 15. அ) ஏப்ரல் 6, 1930

## [5] ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

கான்பூர் சதி வழக்கில் ஆரம்பத்தில் 13 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. 1) எம்.என்.ராய் 2) முசாபர்அகமது 3) சவுகத்உஸ்மானி 4) குலாம்ஹுசைன் 5) எஸ்.ஏ.டாங்கே 6) எம்.சிங்காரவேலர் 7) ஆர்.எல்.சர்மா 8) நளினிகுப்தா 9) ஷமுத்தின்ஹாசன் 10) எம்.ஆர்.எஸ். வேலாயுதன்11) டாக்டர்மணிலால் 12) சம்பூர்ணநந்தா 13) சத்யபக்தா. 8 பேர் மீதே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது: எம்.என்.ராய், முசாபர்அகமது, எஸ்.ஏ.டாங்கே, நளினிகுப்தா, குலாம் ஹுசைன், சிங்காரவேலர், சவுகத்உஸ்மானி, ஆர்.எல். சர்மா. குலாம் ஹுசைன்அரசுத் தரப்புச் சாட்சியாக(அப்ரூவர்) மாறிவிட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். எம்.என்.ராய், ஆர்.எல்.சர்மா ஆகியோர் முறையே ஜெர்மனியிலும் பாண்டிச்சேரியிலும் (ஒருபிரெஞ்சுப்பிரதேசம்) இருப்பதால் நேரில் வரவழைக்காமல் குற்றப்பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்பட்டன. சிங்காரவேலர் மோசமான உடல்நிலை காரணமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார். கடைசியாக, அந்த பட்டியலில் நால்வர் மட்டுமே எஞ்சி யிருந்தனர்.

எம்.சிங்காரவேலர் (18 பிப்ரவரி 1860 – 11 பிப்ரவரி 1946) மதராசில் பிறந்தார். இவர் இளமைக்காலத்தில் புத்தமதத்தைத் தழுவியவர். பிறகு கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் பலரைப் போன்று இவரும் ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து செயல்பட்டவர். எனினும் சில காலத்திற்குப் பிறகு அவர் புரட்சிகர தேசியவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். திரு.வி,கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை இவர் தோற்றுவித்தார். 1923ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் முதன் முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார். 1928ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை (பொன்மலை, திருச்சிராப்பள்ளி) ஏற்பாடு செய்ததில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். அதற்காகத் தண்டனை பெற்றார்.

ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்பது ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷனின் புதுப்பிக்கப்பட்ட ஓர் அத்தியாயமேஆகும். முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசைத் தூக்கி எறிந்து புரட்சி ஒன்றின் மூலமாக ஒரு சோசலிசச் சமூகத்தை நிலைநாட்டுவதே அதன் குறிக்கோளாகும். ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஸன் லாகூரில் சாண்டர்ஸினைக் கொன்றது போன்ற பல நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. 1928 டிசம்பர் மாதத்தில் லஜபதிராய் மீது கொடுந்தாக்குதல் நடத்தியதற்கும் அதனைத் தொடர்ந்த ராயின் மரணத்திற்கும் பொறுப்பான லாகூர் காவல்துறைக்கண்காணிப்பாளர் ஜேம்ஸ் ஏ .ஸ்காட்டுக்குப் பதில் தவறுதலாக சாண்டர்ஸ்பலியானார். 1929, டிசம்பரில் இர்வின்பிரபு (1926 – 1931 ஆம் ஆண்டுகளில் கவர்னர் ஜெனரலாகவும் வைஸ்ராயாகவும் இருந்தவர்) பயணம் செய்து கொண்டிருந்த ரயிலைக் கொளுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர். 1930ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் உத்தரப்பிரதேசத்திலும் இது போன்ற எண்ணற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜே.என்.டாடா எனப் பிரபலமாய் அறியப்பட்ட ஜாம்ஹெட்ஜி நுஸர் வஞ்சி டாடா(1839 – 1904), பரோடாவில் உள்ள நவ்சாரி என்ற இடத்தில் ஒரு பார்சி (ஜொராஷ்ட்ரியன்) வணிகக் குடும்பத்திலிருந்து வந்தவர். இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் இவர் என்பதால், இந்திய நவீனத் தொழிலகங்களின் தந்தை என அழைக்கப்படுகிறார். தனது தந்தையின் வியாபாரத்திற்கு உதவும் பொருட்டு, அவர் உலகம் முழுவதிலும் பயணம் மேற்கொண்டார். மேலும் அவருடைய அனுபவம் எதிர்கால முயற்சிகளுக்கு இது உதவியது. 1868இல் நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடாகுழுமம் என்றானது ஒரு தேசியவாதியாய் குர்லா, பல்பாயில் உருவாக்கிய தனது நிறுவனம் ஒன்றிற்கு "சுதேசி" எனப் பெயரிட்டார். அவரது மகன்களான தோரப்ஜி டாடா மற்றும் ரத்தன்ஜி டாடா ஆகியோர் அவரது கனவுகளை நனவாக்கி வந்தனர். தோரப்ஜி டாடா அவரது தந்தையின் நீண்ட காலக்கனவான இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை 1907ஆம் ஆண்டில் நிறுவினார். இதற்காக அவர் இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் இரும்புத் தொழிலகங்களில் உத்வேகத்துடன் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார். ஒரு நீர் மின்சக்தி நிறுவனத்தை அமைப்பதற்கான அவரது மற்றொரு கனவு அவரது வாழ்நாளுக்குள் நிறைவேறவில்லையெனினும் 1910இல் மிகப் பெருமளவில் டாடா நீர்மின்சக்தி நிறுவனம் உதயமானது. தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய அறிவியல் கழகம் ஒன்றை பெங்களூரில் டாடா குழுமம் நிறுவியுள்ளது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

அ) 1920

ஆ) 1925

இ) 1930

ஈ) 1935

2. கல்பனாதத் எதனுடன் தொடர்புடையவர்?

அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன்

ஆ) வங்காள சபை

இ) இந்தியக் குடியரசு இராணுவம்

ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | |
|---|---|
| அ) கான்பூர் சதிவழக்கு | 1. அடிப்படை உரிமைகள் |
| ஆ) மீரட் சதி வழக்கு | 2. சூரியா சென் |
| இ) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை | 3. 1929 |
| ஈ) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு | 4. 1924 |

அ) 1, 2, 3, 4

ஆ) 2, 3, 4, 1

இ) 3, 4, 1, 2

winmeen.com

ஈ) 4, 3, 2, 1

4. கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?

அ) புலின்தாஸ்

ஆ) சச்சின்சன்யால்

இ) ஜதீந்திர நாத் தாஸ்

ஈ) பிரித்திவதேதார்

5. பின்வரும் கூற்றுகளில் பொருளாதாரப் பெரும்மந்தம் குறித்துச் சரியானவை.

i) இது வடஅமெரிக்காவில் ஏற்பட்டது.

ii) வால்தெருவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெரும்மந்தத்தை விரைவுபடுத்தியது.

iii) பெரும்மந்தம் வசதிபடைத்தவர்களை மட்டுமே பாதித்தது.

iv) விலைவீழ்ச்சி அடைந்ததால் பெரும்மந்தத்தின் போதுசிறப்பான வாழ்க்கை முறையை தொழிலாளர்கள் அனுபவித்தனர்.

அ) I மற்றும் ii

ஆ) i, ii மற்றும் iii

இ) I மற்றும் iv

ஈ) i, iii மற்றும் iv

6. முதலாவது பருத்தித்தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1852

ஆ) 1854

இ) 1861

ஈ) 1865

7. கொடுக்கப்பட்ட குறிப்புகளை கொண்டு சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

i) *"Chittagong Armoury Raiders Reminiscences"* எனும் நூல் கல்பனாதத் என்பவரால் எழுதப்பட்டது.

ii) கல்பனாதத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்.

iii) கல்பனாதத் பேரரசருக்கு எதிராகப்போர் தொடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார்.

அ) I மட்டும்

ஆ) I மற்றும் ii

இ) ii மற்றும் iii

ஈ) அனைத்தும்

8. முதலாவது பயணிகள் இரயில் 1853இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?

அ) மதராஸ் – அரக்கோணம்



winmeen.com

ஆ) பம்பாய் – பூனா

இ) பம்பாய் – தானே

ஈ) கொல்கத்தா – ஹூக்ளி

9. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு ____

அ) 1855

ஆ) 1866

இ) 1877

ஈ) 1888

10. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர்யார்?

அ) எம்.என்.ராய்

ஆ) பகத்சிங்

இ) எஸ்.ஏ.டாங்கே

ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

11. கான்பூர் சதி வழக்குக் குறித்த பின்வரும் எந்தகூற்றுகள்சரியானவை?

i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள்தோன்றின.

ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

iii) இவ்வழக்குநீதிபதி H.E. ஹோம்ஸ்எ ன்பவரின் முன்பாக விசாரணைக் குவந்தது.

iv) விசாரணை மற்றும் சிறைத்தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

அ) i, ii மற்றும் iii

ஆ) i, iii மற்றும் iv

இ) ii, iii மற்றும் iv

ஈ) i, ii மற்றும் iv

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆ) 1925 2. இ) இந்தியக் குடியரசு இராணுவம் 3. ஈ) 4, 3, 2, 1 4. இ) ஜதீந்திரநாத்தாஸ் 5. அ) I மற்றும் ii 6. ஆ) 1854 7. ஈ) அனைத்தும் 8. இ) பம்பாய்– தானே 9. அ) 1855 10. இ) எஸ்.ஏ.டாங்கே 11. அ) i, ii மற்றும் iii

## [6] தேசியவாத அரசியலில் வகுப்புவாதம்

"இந்து–முஸ்லிம் வகுப்பு வாதம், நடுத்தர வகுப்புகளுக்கிடையே நடந்த மோதல்களின் விளைவே ஆகும். மனசாட்சியுள்ள இந்து மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இத்தகைய வகுப்புவாதத்திலிருந்து முற்றிலும் விலகியே இருந்தனர்". – ஜவஹர்லால்நேரு

தனித்தொகுதிஅல்லதுவகுப்புவாரித்தொகுதி: இந்த வகையான முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். 1909 ஆம் ஆண்டு மிண்டோ–மார்லிசட்டம், பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது.

முதல் உலகப்போருக்கு முன்னர் கலீஃபா, காபா (இஸ்லாமியச்சமயத்தின்புனிதமானஇடம்) ஆகியவற்றின் நலன்களைப் பாதுகாப்பதாக இங்கிலாந்து வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் முதல் உலகப்போரில் துருக்கியின் தோல்விக்குப் பின்னர் அவ்வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்துவிட்டது. திகைத்துப்போன முஸ்லிம் சமூகத்தினர் ஆங்கிலேயருக்குத் தங்கள் கோபத்தைக் காட்டவும், துருக்கியின் கலீஃபாவை பாதுகாக்கவும், கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர்.

பிரிவினைவாத தேசியத்தின் வளர்ச்சி குறித்த தனது மன வேதனையை காந்தி பின்வருமாறு வெளிப்படுத்தினார்: "தனி மனிதர்களின் எண்ணிக்கையைப் போலவே பல மதங்கள் உள்ளன". ஆனால் தேசியத்தின் ஆன்மா குறித்த விழிப்புணர்வுள்ளவர்கள் மற்றவர்களின் மதங்களில் தலையிடமாட்டார்கள். இந்தியாவிலுள்ள அனைவரும் இந்துக்களாக மட்டுமே இருக்க வேண்டுமென இந்துக்கள் நம்பினால் அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள் என்றே பொருள். தங்கள் நாட்டை உருவாக்கிய இந்துக்கள், சீக்கியர்கள், முகமதியர்கள், பார்சிகள், கிறித்துவர்கள் ஆகிய அனைவரும் நாட்டின் சகமனிதர்களே. தங்களுடைய நலன்களுக்காக அவர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தாக வேண்டும். உலகத்தின் எந்தவொரு பகுதியிலும் ஒரு நாட்டுரிமையும் ஒரு மதமும் ஒரே பொருளைத் தருகிற வார்த்தைகளாக இல்லை. இந்தியாவில் அவ்வாறு எப்போதுமே இருந்ததில்லை.

பாகிஸ்தான் என்ற எண்ணவோட்டம் 1940இல் முஸ்லிம் லீக் மேடைகளிலிருந்து வெளிப்பட்டாலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே கவிஞரும் அறிஞருமான முகமது இக்பாலால் சிந்திக்கப்பட்டதாகும். 1930ல் அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் ஆண்டு மாநாட்டில் இக்பால் ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லிம் அரசைத்தான் காணவிரும்புவதாகக் கூறினார். இது பின்னர் கேம்பிரிட்ஜ் மாணவர்களில் ஒருவரான ரகமது அலியால் வலுவாக வெளிப்படுத்தப்பட்டது. லீக்கின் அடிப்படைக் கோரிக்கையானது 'இருநாடுகொள்கை' ஆகும். இதனை முதலில் சர் வாசிர் ஹசன் என்பவர்தான் 1937இல் நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார். இப்பரந்தகண்டத்தில் வாழும் இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சமூகங்கள்அல்ல, ஆனால் பல வழிகளில் இரு நாட்டினராக கருதுதல் வேண்டும் என்றார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?

அ) உருது

ஆ) இந்தி

இ) மராத்தி

ஈ) பாரசீகம்

2. லண்டன் பிரிவுக் கவுன்சிலில் இடம் பெற்ற முதல் இந்தியர் ______________.

அ) ரஹமத்துல்லாசயானி

ஆ) சர்சையது அகமது கான்

இ) சையது அமீர்அலி

ஈ) பஃருதீன் தயாப்ஜி

3. **கூற்று** : 1870 இல் வங்காள அரசாங்க ஆணை இஸ்லாமிய தொழில் வல்லுநர்குழுக்களிடையே ஐயங்களை ஏற்படுத்தியது.

**காரணம்:** அவ்வாணை உருது மொழி பாரசீக–அரபி எழுத்து முறைக்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவந்தது.

அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

இ) கூற்று தவறு காரணம் சரி.

ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

4. இரு நாடு கொள்கையை முதன் முதலில் கொண்டு வந்தவர் __________.

அ) இராஜாஜி

ஆ) ராம்சே மெக்டொனால்டு

இ) முகமது இக்பால்

ஈ) சர் வாசிர் ஹசன்

5. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது

அ) 12 மாகாணங்கள்

ஆ) 7 மாகாணங்கள்

இ)5 மாகாணங்கள்

ஈ) 8 மாகாணங்கள்

6. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது

அ) 22 டிசம்பர், 1940

ஆ) 5 பிப்ரவரி, 1939

இ) 23 மார்ச், 1937

ஈ) 22 டிசம்பர், 1939

7.பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வுசெய்க.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ) அன்னிபெசண்ட் | 1. அலிகார் இயக்கம் |

ஆ) சையது அகமது கான் 2. தயானந்த சரஸ்வதி

இ) கிலாபத் இயக்கம் 3. பிரம்மஞான சபை

ஈ) சுத்தி இயக்கம் 4. அலி சகோதரர்கள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

8. பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியானவற்றைத் தேர்வுசெய்க.

i) அலிகார் இயக்கத்தைத் தோற்றுவித்த சர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசைஆதரித்தார்.

ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்து மத வகுப்புவாத அரசியலுக்குஅடித்தளமிட்டது.

அ) கூற்று (i) மற்றும் (ii) சரி

ஆ) கூற்று (i) சரி (ii) தவறு

இ) கூற்று (i) தவறு (ii) சரி

ஈ) கூற்று (i) மற்றும் (ii) தவறு

9. எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?

அ) 25 டிசம்பர், 1942

ஆ) 16 ஆகஸ்ட், 1946

இ) 21 மார்ச், 1937

ஈ) 22 டிசம்பர், 1939

10. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றார்

அ) லின் லித்கோ

ஆ) பெதிக் லாரன்ஸ்

இ) மௌண்ட் பேட்டன்

ஈ) செம்ஸ்ஃபோர்டு

11. **கூற்று**: பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்பு வாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்.

**காரணம்:** மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி, காரணம் தவறு.

இ) கூற்றுமற்றும்காரணம்தவறு.

ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

12. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | |
|---|---|
| அ) இந்து மத மறுமலர்ச்சி | 1. M.S.கோல்வாக்கர் |
| ஆ) கலீஃபா பதவி ஒழிப்பு | 2. ஆரியசமாஜம் |
| இ) லாலா லஜபதி ராய் | 3. 1924 |
| ஈ) ராஷ்டிரிய சுய சேவாசங்கம் | 4. இந்து–முஸ்லிம் மாகாணங்களாக பஞ்சாப் பிரித்தல் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 3 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 1 | 3 | 2 | 4 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஈ) பாரசீகம் 2. இ) சையது அமீர்அலி 3. ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது. 4. ஈ) சர் வாசிர் ஹசன் 5. ஆ) 7 மாகாணங்கள் 6. ஈ) 22 டிசம்பர், 1939 7. அ) 3 1 4 2 8. அ) கூற்று (i) மற்றும் (ii) சரி 9. ஆ) 16 ஆகஸ்ட், 1946 10. இ) மௌண்ட்பேட்டன் 11. ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது. 12. ஈ) 2 3 4 1

## 7. இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக் கட்டம்

வங்காள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உட்பட்ட அனைத்துப் பதவிகளில் இருந்தும் ஆகஸ்டு 1939இல் இந்திய தேசிய காங்கிரசால் விடுவிக்கப்பட்ட போஸ், தனக்கு ஆதரவு திரட்டி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளலானார். இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1940 ஜூலை 3 அன்று கைது செய்யப்பட்ட அவர் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். மேற்கொண்டு ஐரோப்பாவில் தொடர்ந்து நடந்த போரில் ஜெர்மனியே வெல்லும் என்று போஸ் நம்பினார். அவர் அச்சு நாடுகளோடு கைக்கோர்ப்பதன் மூலம் இந்தியா சுதந்திரம் பெற முடியும் என்ற சிந்தனையை வளர்த்தெடுத்தார். கல்கத்தாவிலிருந்து 1941 ஜனவரி 16–17இன் நள்ளிரவில் தப்பிய அவர், காபூல் மற்றும் சோவியத்நாடு வழியாக ஒரு இத்தாலியக் கடவுச்சீட்டைக் கொண்டு மார்ச் மாதத்தின் கடைசியில் பெர்லின் சென்று சேர்ந்தார். அங்கு ஹிட்லரையும் கோயபல்ஸையும் சந்தித்தார். இரு நாசி தலைவர்களும் பெரிதாக இந்திய ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்றாலும் ஆசாத் ஹிந்த் ரேடியோவை உருவாக்க அனுமதி வழங்கினர். ஹிட்லரையும், அவருக்கு நெருக்கமான அரசியல் தலைவர்களையும் சந்தித்த போதும் போஸால் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியவில்லை போரில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட பின்னடைவை அடுத்து, போஸ் 1943 ஜூலையில் சிங்கப்பூர் சென்று சேர்ந்தார்.

winmeen.com

மார்ச் 23, 1940 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது: 'பூகோளரீதியில் தொடர்ச்சியாக அமையப் பெற்ற பகுதிகள் பிரிக்கப்பட்டும் தேவைக்கேற்ப இந்தியாவின் வடமேற்கிலும் கிழக்குப் பகுதியிலும் எண்ணிக்கை அளவில் இஸ்லாமியப் பெரும்பான்மை இருப்பது போன்றப் பகுதிகளை உருவாக்கி இவையாவற்றையும் இணைத்து தன்னாட்சியும் இறையாண்மையும் கொண்டவைகளாக மாற்றி அதிலிருந்து ஒரு தனி நாட்டை உருவாக்க வேண்டும்.' (மூலம்: சுமித்சர்க்கார், மாடர்ன்இந்தியா 1885 – 1947 (ஆங்கிலம்), பியர்சன், 2018)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. தனி நபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?

அ) மார்ச் 23, 1940

ஆ) ஆகஸ்ட் 8, 1940

இ) அக்டோபர் 17, 1940

ஈ) ஆகஸ்ட் 9, 1942

2. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வுசெய்க.

| | |
|---|---|
| அ) இந்து–முஸ்லீம்கலவரம் | 1. மோகன்சிங் |
| ஆ) ஆகஸ்ட்கொடை | 2. கோவிந்த் பல்லப் பந்த் |
| இ) பிரிவினை தீர்மானத்தை முன்மொழிந்தவர் | 3. லின் லித்கோ பிரபு |
| ஈ) இந்திய தேசிய இராணுவம் | 4. நவகாளி |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 4 | 2 | 1 | 3 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

3. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது.

அ) வேவல் பிரபு

ஆ) லின்லித்கோ பிரபு

இ) மௌண்ட்பேட்டன்பிரபு

ஈ) இவர்களில் யாருமில்லை

4. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வுசெய்க.

| | |
|---|---|
| அ) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் | 1. டோஜா |
| ஆ) சீனக் குடியரசுத் தலைவர் | 2. வின்ஸ்டன் சர்ச்சில் |
| இ) பிரிட்டிஷ் பிரதமர் | 3. ஷியாங்கேஷேக் |

ஈ) ஜப்பான் பிரதமர் 4. எஃப்.டி.ரூஸ்வெல்ட்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

5. சுபாஷ்சந்திரபோஸ் எந்த காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார்?

அ) 1938

ஆ) 1939

இ) 1940

ஈ) 1942

6. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?

அ) சட்டமறுப்பு இயக்கம்

ஆ) ஒத்துழையாமை இயக்கம்

இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

ஈ) இவை அனைத்தும்.

7. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தைநடத்தியவர்யார்?

அ) உஷா மேத்தா

ஆ) பிரீத்திவ தேதார்

இ) ஆசப் அலி

ஈ) கேப்டன் லட்சுமி

8. இந்திய தேசிய இராணுவப் படைவீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?

அ) ஜவஹர்லால் நேரு

ஆ) மோதிலால் நேரு

இ) இராஜாஜி

ஈ) சுபாஷ் சந்திர போஸ்

9. 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரச பிரதிநிதி யார்?

அ) வேவல் பிரபு

ஆ) லின்லித்கோ பிரபு

winmeen.com

இ) மௌண்ட்பேட்டன் பிரபு

ஈ) வின்ஸ்டன் சர்ச்சில்

10. **கூற்று:** வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.

**காரணம் :** அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறையைப் பின் பற்றியது.

அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரனம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரிஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

11. இந்திய தேசிய இராணுவம் எந்தநாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?

அ) ஜெர்மனி

ஆ) ஜப்பான்

இ) பிரான்ஸ்

ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

12. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் _______ ஆகும்.

அ) சுபாஷ் படைப்பிரிவு

ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு

இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு

ஈ) ஜான்ஸி ராணி படைப்பிரிவு

13. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார்?

அ) இரங்கூன்

ஆ) மலேயா

இ) இம்பால்

ஈ) சிங்கப்பூர்

14. இந்திய தேசிய இராணுவப்படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது?

அ) செங்கோட்டை, புதுடெல்லி

ஆ) பினாங்

இ) வைஸ்ரீகல்லாட்ஜ், சிம்லா

ஈ) சிங்கப்பூர்

15. 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரச பிரதிநிதி

அ) வேவல் பிரபு

ஆ) லின்லித்கோ பிரபு

winmeen.com

இ) மௌண்ட்பேட்டன் பிரபு

ஈ) கிளமண்ட் அட்லி

16. 1946 இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?

அ) ஜவஹர்லால் நேரு

ஆ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

இ) ராஜேந்திரபிரசாத்

ஈ) வல்லபாய் படேல்

17. சரியான வரிசையில் அமைத்து விடையைத் தேர்வுசெய்க.

i) இந்திய தேசிய இராணுவம் தோற்றுவிக்கப்படுதல்

ii) இராயல் இந்திய கடற்படைக்கலகம்

iii) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை

iv) இராஜாஜி திட்டம்

அ) ii, i, iii, iv

ஆ) i, iv, iii, ii

இ) iii, iv, i, ii

ஈ) iii, iv, ii, i

18. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.

i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை

ii) நேரடி நடவடிக்கை நாள்

iii) ஆகஸ்ட் கொடை

iv) தனி நபர் சத்தியாகிரகம்

அ) i, ii, iii, iv

ஆ) iii, i, ii, iv

இ) iii, iv, i, ii

ஈ) i, iii, iv, ii

19. இந்தியர்கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?

அ) வின்ஸ்டன் சர்ச்சில்

ஆ) மௌண்ட்பேட்டன் பிரபு

இ) கிளமண்ட் அட்லி

ஈ) F.D.ரூஸ்வெல்ட்

20. பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?

அ) ஆகஸ்ட் 15, 1947

ஆ) ஜனவரி 26, 1950

இ) ஜூன், 1948

ஈ) டிசம்பர், 1949

19. **கூற்று:** J.G.ஃபிக்ட் ஜெர்மானியர்களிடையே தேசியவாதத்தை ஊட்டினார்.

**காரணம்:** ஃபிக்ட் இளம் இத்தாலி இயக்கத்தை சேர்ந்தவர் ஆவார்.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் சரியானவற்றைத் தெரிவு செய்து பொருத்துக.

| | |
|---|---|
| அ) மெட்டர்னிக் | 1. பியட்மாண்ட்–சார்டினியாவின் ஆட்சியாளர் |
| ஆ) பத்தாம்சார்லஸ் | 2. பிரெஞ்சு வெளியுறவுத்துறை அமைச்சர் |
| இ) கிராமோன்ட் | 3. பிரெஞ்சு மன்னர் |
| ஈ) சார்லஸ்ஆல்பர்ட் | 4. ஆஸ்திரிய–ஹங்கேரியின் பிரதம அமைச்சர் |

அ) 1, 3, 4, 2

ஆ) 4, 2, 1, 3

இ) 4, 1, 2, 3

ஈ) 4, 3, 2, 1

**விடைகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1.அ) எல்பா 2. இ) பெல்ஜியம் 3. ஈ) கூற்று தவறு. காரணம் சரி. 4. இ) 1824 5. ஆ) 3, 4, 2, 1 6. ஆ) 1848 7. இ) கூற்று சரி, காரணம் தவறு 8. இ) வடக்கத்திய நட்சத்திரம் 9. ஆ) மூன்றாம் நெப்போலியன் 10. ஆ) எட்டியன் –கேப்ரியல்மோராலி 11. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 12. அ) பாரிஸ் 13. இ) 1831 14. அ) பொது வாக்கெடுப்பு 15. ஈ) கரிபால்டி 16. ஈ) ஆஸ்திரியா, பிரஷ்யா 17. ஆ) எம்ஸ்தந்தி 18. இ) J.G.ஃபிக்ட் 19. இ) கூற்று சரி, காரணம் தவறு 20. ஈ) 4, 3, 2, 1

## [12] ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

விலையையும், தயாரிப்பையும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு பொருளின் தயாரிப்பாளர்கள் அனைவருமோ அல்லது பெரும்பகுதியினரோ கூடி உருவாக்குவதே அறக்கட்டளையாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் கனரகதொழிற்சாலைகள் யாவும் அறக்கட்டளை–சங்கம் (Trust–Association) மூலமாகவே நிர்வகிக்கப்பட்டு அவற்றின் தயாரிப்பில் மூலப்பொருள்களை எடுப்பதில் துவங்கி தயாரித்து முடிக்கப்பட்ட பொருள்களை வெளியேற்றுவது வரை கட்டுப்படுத்தியது. ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் அங்கமாக செயல்பட்டு தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களில் போட்டியை வரையறைப்படுத்த உருவாக்கப்படும் அமைப்பே கார்டெல்

ஆகும். ஜெர்மானிய தயாரிப்பாளர்களின் செயல்திறனை உலக வணிகத்தில் பெரிதும் மேம்படுத்தியதால் கார்டெல்கள் செழித்துப் பரவின.

**ஆப்பிரிக்காவைபிரித்தல்:** பெல்ஜிய மன்னரான இரண்டாம் லியோபால்ட் 1876 இல் தனது சர்வதேச ஆப்பிரிக்க சங்கத்தின் வாயிலாக ஆய்வு நடத்தி மிகச் சிறந்த ரப்பர் விளையும் பகுதியை அடையாளப்படுத்திதன் நாட்டோடு இணைத்த பகுதியே தற்காலத்தில் பெல்ஜியகாக்கோ என்றழைக்கப்படுகிறது. அதுபோன்றே பிரெஞ்சுக்காரர்களும் டுனிஸ் பகுதியை தன்னுடன் இணைக்கும் எண்ணம் கொண்டிருந்த இத்தாலியர்களின் அதிருப்தியை சம்பாதிக்கும் விதமாக 1881ஆம் ஆண்டு அப்பகுதியில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு தங்கள் வசப்படுத்தினார்கள். இது போன்றே 1891 இல் ஐவரி கோஸ்ட்டையும், 1892 இல் டஹோமேயையும் (Dahomey), 1895 இல் மடகாஸ்கரையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பிரிட்டன் தென் ஆப்பிரிக்காவின் நடாலையும் டிரான்ஸ்வாலையும் இணைத்துக் கொண்டதோடு ஆப்பிரிக்காவின் பிறபகுதிகளையும் இணைத்தது. பிரிட்டன் 1883 ஆம் ஆண்டு எகிப்தின் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவியது. கோல்ட்கோஸ்ட் காலணிகள், உகாண்டா, சான்சிபார், கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் ரொடீஷியா போன்றவை அடுத்தடுத்து பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் அங்கங்களாயின. ஜெர்மனி 1884ற்கும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் டோகோலாந்து, கேமரூன், ஜெர்மானிய தென்மேற்கு ஆப்பிரிக்கா, ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்நூற்றாண்டின் முடிவில் நில ஆக்கிரமிப்பிற்கான போட்டி இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆப்பிரிக்கா முழுமையும் பெரும் ஐரோப்பிய சக்திகளுக்கிடையே பிரித்துக் கொள்ளப்பட வழி ஏற்படுத்தியது. லைபீரியா, மொராக்கோ, அபிசீனியா ஆகிய நாடுகளே இணைக்கப்படாமல் எஞ்சிநின்றன.

ஆங்கிலப் பொருளாதார நிபுணரான ஜான்A.ஹாப்சன் ஏகாதிபத்தியத்தை இவ்வாறு வரையறுக்கிறார்: ஏகாதிபத்தியம் என்பது தொழிலை கட்டுப்படுத்துவோர் தங்கள் செல்வங்கள் சென்று சேரும் பாதையை விசாலப்படுத்தி அயல்நாட்டு சந்தைகளையும், அயல்நாட்டு நிதியையும் பயன்படுத்தி தாங்கள் உள்ளூரில் விற்கமுடியாத பொருள்களையும், சந்தைப்படுத்த முடியாத மூலதனத்தையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர எடுக்கும் முயற்சியே என்கிறார்.

**அகழிப்போர் முறை:** தோட்டாக்களும், குண்டுகளும் பறந்து கொண்டேயிருந்த போர்க்களங்களை உள்ளடக்கிய முதல் உலகப்போர் எழுப்பிய ஆபத்தான சூழல் வீரர்களைத் தங்கள் உடலையும், உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத் தோண்டி அதனுள் அடைக்கலம் தேடவைத்தது. துருப்புகளால் தோண்டப்பட்ட அகழிகளோ, குழிகளோ அவர்களை குண்டுகள் வெளியிட்ட தீயிலிருந்து பாதுகாக்க உதவின. ஜெர்மானியர்கள் தங்கள் காலாட் படைப்பிரிவிற்கு நன்றாகத் தோண்டப்பட்ட அகழிகளையும், அதில் மின்சாரம் மற்றும் படுக்கை வசதிகளையும் செய்து கொடுத்தது. உலகப்போரை அடையாளப்படுத்தும் அகழி முறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றனுக்கு இணையாக மற்றொன்று செல்வதேயாகும். ஒவ்வொரு அகழியையும் எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்ல முடியாத படி நேர்கோட்டில் இல்லாமல் வளைந்து நெளிந்து வடிவமைத்திருந்தனர். அகழிகளின் முக்கிய வரிசைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படவும், பின்புறத்தில் தொடர் இணைப்பு அகழிகளும் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக உணவு, வெடிபொருள்கள், புதியதுருப்புகள், கடிதங்கள், ஆணைகள் போன்றவைப ரிமாற்றம் செய்யப்பட்டன.

**Q கப்பல்களும் U படகுகளும் :** முதல் உலகப்போரின் காலத்தில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் நீர்மூழ்கிகள் அல்லது U–படகுகளாகும். பிரிட்டனின் கப்பல்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள். ஒரே மாதத்தில் 880,000 டன்கள்

கனத்திற்கு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தன. Q – கப்பல்கள் பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும். பிரிட்டன் 200க்கும் மேற்பட்ட நீராவி கப்பல்களையும், மீன் பிடிகப்பல்களையும், சரக்கு படகுகளையும் கொண்டு வாணிப நடவடிக்கையை மேற்கொள்வது போன்று ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தி U–படகுகள் விளைவித்த ஆபத்துகளை எதிர் கொண்டது. பிரிட்டன் இக்கப்பல்களின் வாயிலாக ஜெர்மனியை தாக்குதலைத் தூண்டச் செய்துபின் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களையும் படைபலத்தையும் கொண்டு பதிலடி கொடுக்கும் உத்தியைக் கையாண்டது.

**கலிபோலிபடையெடுப்பு 1915–16:** டார்டெனெல்ஸ் படையெடுப்பு என்றும் கூறப்படும் இப்படையெடுப்பு தோழமை நாடுகளால் ஐரோப்பாவிலிருந்து ரஷ்யாவிற்கு செல்லும் கடற்வழிப்பாதையைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு நடத்தப்பட்டு தோல்வியில் முடிந்தது. போதுமான உளவு தகவல்களை சேகரிக்காததும் போரிடும் பகுதியின் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாததும் துருக்கியர்களின் கடும் எதிர்ப்பும் ஒரு சேர்ந்து படையெடுப்பின் வெற்றியைத் தடுத்தன. தாங்கள் துவங்கிய இடத்திலிருந்து சிறிதளவே முன்னேறி கடும் சேதங்களை சந்தித்தும் அக்டோபர் மாதத்தின் பாதி வரை தோழமை நாடுகள் தவித்துக் கொண்டிருந்தன.

**காம்ப்ராய்போர் (Battle of Cambrai):** (நவம்பர் – டிசம்பர் 1917) பிரிட்டிஷாரால் அதிக அளவில் டாங்கி வகை பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டமை பிரான்சின் காம்ப்ராயில் நடந்தப் போரிலாகும். திடீரென 340 டாங்கிகள் போர் முனையில் தோன்றியதும் ஜெர்மானியர்கள் பெரும் திகைப்பிற்கு உள்ளானார்கள்.

**குடியரசுத்தலைவர் உட்ரோவில்சனின் முன்மொழிவு உள்ளடக்கியவைகளாவது:**

1. திறந்த உடன்படிக்கைகள் வெளிப்படையாகவே உருவாக்கப்படுதல்

2. கட்டுப்பாடுகள் யாவும் கடல்வெளியில் தளர்த்தப்படல்

3. நாடுகளுக்கிடையே பொருளாதாரத்தடைகள் அகற்றப்படல்

4. போர்த் தளவாட உற்பத்தி குறைக்கப்படல்

5. காலனி சார்ந்த சிக்கல்களை சம்மந்தப்பட்ட மக்களின் விருப்பமறிந்து பாரபட்சம் காட்டாமல் தீர்விற்கு உட்படுத்தல்

6. ரஷ்யா தனக்கு ஏற்றதாகக் கருதும் எத்தகைய அரசையும் நிறுவ அதற்கு வாய்ப்பளிப்பதோடு அவ்வரசை பிற நாடுகள் ஏற்றுக் கொள்ளவும், ஆதரிக்கவும், வரவேற்கவும் செய்தல்

7. பெல்ஜியத்தை மீண்டும் சுதந்திர நாடாக்குதல்

8. அல்சேசையும், லொரைனையும் பிரான்சிடமே மீண்டும் ஒப்படைத்தல்

9. இத்தாலிய எல்லையை தேசிய அடிப்படையில் மறுநிர்ணயித்தல்

10. தேசிய சுயநிர்ணயம்

11. ருமேனியா, செர்பியா, மான்டிநீக்ரோ ஆகியவை மீண்டும் உருவாக்கப்பட்டு செர்ப்பியாவிற்கு கடலை அடையவழி ஏற்படுத்தல்

12. துருக்கி மக்களை தன்னாட்சி கொண்ட வளர்ச்சி முறைக்கு கொண்டு செல்வதோடு கருங்கடல் நீர்ச்சந்தியிலிருந்து மத்தியதரைக்கடல்வரை "நிரந்தரமாக திறந்துவிடல்"

13. போலிஷ் மக்களுக்கென்றே சுதந்திரமான போலந்து உருவாக்கப்பட்டு அதற்கு கடல் தொடர்பு ஏற்படுத்துதல்.

14. பன்னாட்டு சங்கத்தை ஏற்படுத்தல்.

**விளாடிமிர் இலிச்லெனின் (1870 – 1924):**

லெனின் மத்திய வோல்கா பகுதியில் பிறந்தார். அவரது மூத்த சகோதரர் 1887 ஆம் ஆண்டு சார் மன்னரைக் கொல்ல முயன்ற குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார். கார்ல்மார்க்சின் சிந்தனைகளால் உந்தப்பட்ட லெனின் வெகுஜன நடவடிக்கையின் மூலமாகவே விடுதலை அடைய முடியும் என்று நம்பினார். அவர் செயின்ட்பீட்டர்ஸ் பர்க்நகரில் ஆலை ஊழியர்களின் வாசகவட்டத்திற்கு மார்க்சியம் குறித்து வகுப்புகள் எடுத்து காலத்தை செலவழித்துக்கொண்டிருந்தார். அவர் 1895இல் கைது செய்யப்பட்டு சைபீரியாவில் சிறைவைக்கப்பட்டார். பின்னர் 1900 இல் விடுவிக்கப்பட்ட அவர் ஐரோப்பாவின் பெருநகரங்களில் ஒரு விடுதியிலிருந்து மறுவிடுதிக்கென்று புலம் பெயர்ந்து கொண்டேயிருந்தார். இடதுசாரிகளில் இருந்து காங்கிரசிற்கு தேர்வுசெய்யப்பட்ட 43 உறுப்பினர்களைக் கொண்ட முக்கிய கட்சியான சமூக ஜனநாயககட்சி 1903 இல் லண்டனுக்குபுலம்பெயர்ந்தது. அங்குஅமைப்பு, உத்தி போன்ற பிரச்சனைகளை முன்னிறுத்தி காங்கிரஸ் பிளவுபட்டது. போல்ஷ்விக் என்னும் ஒரு சிறு பெரும்பன்மையினை (போல்ஷின்ஸ்ட்வோ) லெனின் ஆதரிக்க அதுவே பின்னர் போல்ஷ்விக்கட்சியாக உருவெடுத்தது. சிறுபான்மையாக இருந்த அவரது எதிரணியினர் மென்ஷ்விக்குகள் என்றழைக்கப்பட்டார்கள்.

பல்லாண்டு கால கட்டியெழுப்புதலின் வடிவமான சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவ மேநிகிலிசமாகும். நிகிலிசம் நாட்டின் அரசு, கிறித்தவ ஆலயம், குடும்பம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை மறுத்தது. அதன் நம்பிக்கைகள் விஞ்ஞான அடிப்படையிலான உண்மையைச் சுற்றியே அமைந்திருந்தன.

ப்ராவ்தா என்ற ரஷ்ய சொல்லுக்கு "மெய்" என்று பொருள். இதுவே சோவியத் ஐக்கியத்தின் பொதுவுடைமை கட்சிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாளாக 1918 முதல் 1991 வரை இருந்தது.

**பாசிசவாதம்:** பாசிசம் என்ற பதத்தின் மூலச் சொல்லான பாசஸ் என்னும் லத்தீன் சொல் ரோமானிய தேசத்தின் அதிகாரத்தைக் குறிக்கும் தடிகளால் சூழப்பட்ட கோடாரியைச் சுட்டுவதாகும்.

பாசிசம் என்பது ஒருவகையான தீவிர அதிகாரங்கொண்ட உயர் தேசியவாதம்கலந்த சர்வாதிகார சக்தியையும், அதனால் வலுப்பெற்ற எதிரிகளை ஒடுக்கும் தன்மையையும், சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மையப்படுத்தும் போக்கையும் உள்வாங்கி இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவில் முக்கியத்துவமடைந்த ஒன்றாகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ஜெர்மனியின் முன்னேறி வந்து கொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?

அ) மார்னே போர்

ஆ) டானென்பர்க் போர்

இ) வெர்டூன் போர்

ஈ) சோம் போர்

2. 'அரசின் தடையற்ற' (Laissez Faire) என்னும் பதத்தைஉருவாக்கியவர் __________ ஆவார்.

அ) ஜான் A.ஹாப்சன்

ஆ) கார்ல் மார்க்ஸ்

இ) ஃபிஷர்

ஈ) கௌர்னே

3. *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations* என்ற நூலை எழுதியவர் _____________ ஆவார்.

அ) ஆடம் ஸ்மித்

ஆ) தாமஸ் பைன்

இ) குஸ்னே

ஈ) கார்ல் மார்க்ஸ்

4. இங்கிலாந்து _____________ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக்கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.

அ) 1833

ஆ) 1836

இ) 1843

ஈ) 1858

5. **கூற்று:** பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் பல நாடுகள் மிகை உற்பத்தியால் பிரச்சனைகளை எதிர்கொண்டன.

**காரணம்:** மிகைஉற்பத்தி, நாடுகளை புதிய சந்தைகளைக் கண்டுபிடிக்க அழுத்தங்கொடுத்தது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும்சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

6. 1879 ஆம் ஆண்டில் _____________ கட்டண சட்டத்தை இயற்றியது.

அ) ஜெர்மனி

ஆ) பிரான்ஸ்

இ) பிரிட்டன்

ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

7. ____________க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

அ) ரஷ்ய– ஜப்பனியப் போர்

ஆ) இரண்டாம் அபினிப் போர்

இ) இரண்டாம் ஆங்கிலோ–சீனப் போர்

ஈ) சீன–ஜப்பானியப் போர்

8. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ் தம் புரிந்தநாடு _________ ஆகும்.

அ) ஸ்பெயின்

ஆ) பிரிட்டன்

இ) அமெரிக்க ஐக்கிய நாடு

ஈ) பிரான்ஸ்

9. எந்தநாடு 21 நிர்ப்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?

அ) பிரான்ஸ்

ஆ) ரஷ்யா

இ) ஜப்பான்

ஈ) பிரிட்டன்

10. ________ ஐ அடிப்படையாகக் கொண்டுஅல்பேனியா எனும் புது நாடு உருவாக்கப்பட்டது.

அ) புக்காரெஸ்ட் உடன்படிக்கை, 1913

ஆ) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை, 1919

இ) லண்டன் உடன்படிக்கை, 1913

ஈ) செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை

11. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம்வகிக்கவில்லை?

அ) பல்கேரியா

ஆ) ஆஸ்திரிய–ஹங்கேரி

இ) துருக்கி

ஈ) மாண்டிநீக்ரோ

12. பாரிசை நெருங்கிக் கொண்டிருந்த தாக்குதலை உணர்ந்து பிரெஞ்சு அரசு ________ பகுதிக்கு நகர்ந்து சென்றது.

அ) மார்செல்லிஸ்

ஆ) போர்டியாக்ஸ்

இ) லியோன்ஸ்

ஈ) வெர்செய்ல்ஸ்

13. கீழ்க்காண்பனவற்றுள் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் பகுதியாக கருதப்படாதது எது?

அ) ஜெர்மனி அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஆ) சார் பள்ளத்தாக்கு பிரான்சிற்கு வழங்கப்பட வேண்டும்.

இ) ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும்.

winmeen.com

ஈ) டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்.

14. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.

அ) விடுதலை ஆணை – இரண்டாம் அலெக்ஸாண்டர்

ஆ) இரத்த ஞாயிறு – இரண்டாம் நிக்கோலஸ்

இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் – முதலாம் நிக்கோலஸ்

ஈ) பிரெஸ்ட்–லிடோவ்ஸ்ல் உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்

15. **கூற்று:** பன்னாட்டு சங்கம் அதிகாரத்தை செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

**காரணம்:** "கூட்டுப்பாதுகாப்பு" என்ற கொள்கையை மெய்வழக்கத்திற்குள் நடைமுறைப்படுத்தமுடியவில்லை.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

16. **கூற்று:** உலகையே கடுமையாக பாதித்தப் பொருளாதார பெருமந்தம் சோவியத் ரஷ்யாவை பாதிக்கவில்லை.

**காரணம்:** நிலம் சமூக உடைமையாக அறிவிக்கப்பட்டு ஏழைமக்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

அ) கூற்று, காரணம் இரண்டும்சரி. காரணம்கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

17. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொதுசெயலாளரான எரிக்ட்ரம் மோன்ட் ___________ நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

அ) பிரான்ஸ்

ஆ) தென்னாப்பிரிக்கா

இ) பிரிட்டன்

ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

18. பன்னாட்டு சங்கம் ___________ ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.

அ) 1939

ஆ) 1941

இ) 1945

ஈ) 1946

19. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார்?

அ) ஜெனரல்லூடன் டார்ஃப்

ஆ) வான்ஹிண்டன் பர்க்

இ) ஜெனரல்ஸ் மட்ஸ்

ஈ) ஆல்ஃபிரட்வான் பெத்மண்

20. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?

அ) அவந்தி

ஆ) ப்ராவ்தா

இ) மார்க்சிஸ்ட்

ஈ) மெய்ன்காம்ப்

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. அ) மார்னேபோர் 2. ஈ) கௌர்னே 3. அ) ஆடம்ஸ்மித் 4. அ) 1833 5. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 6. அ) ஜெர்மனி 7. ஈ) சீன–ஜப்பானியப்போர் 8. இ) அமெரிக்கஐக்கியநாடு 9. இ) ஜப்பான் 10. இ) லண்டன்உடன்படிக்கை, 1913 11. ஈ) மான்டிநீக்ரோ 12. ஆ) போர்டியாக்ஸ் 13. இ) ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும். 14. ஈ) பிரெஸ்ட்–லிடோவ்ஸ்ல் உடன்படிக்கை–மூன்றாம் அலெக்ஸாண்டர் 15. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 16. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 17. இ) பிரிட்டன் 18. ஈ) 1946 19. ஆ) வான்ஹிண்டன்பர்க் 20. அ) அவந்தி

## [14] இரண்டாம் உலகப் போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

**தைபிங்** (பெரும் அமைதி என்று பொருள்) **கிளர்ச்சி** ஒரு விவசாய கிளர்ச்சியாக மட்டுமே துவங்கியது. ஆனால் விரைவில் அது ஹங்ஹிஸியு–சுவான் என்ற வேளாண் பின்புலத்தைக் கொண்டு பள்ளி ஆசிரியரின் தலைமையில் ஒரு புரட்சி இயக்கமாகவே வடிவெடுத்தது. அவர் மக்களிடையே சமத்துவம், நிலத்தை சமமாக பகிர்தல், பழைய சமூக வேற்றுமைகளுக்கு முடிவு கட்டல் போன்ற கருத்துக்களை எடுத்துச்சென்றார். 1853இல் இவ்வியக்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு மில்லியன் என்ற அளவை எட்டி நான்கிங் பகுதியை வெற்றிகரமா தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றதோடு நாட்டின் 40 சதவீதப்பகுதிகளை தனிநாடாக பாவித்து இயக்கமே நிர்வகிக்கலானது. ஆனால் தைபிங்கின் தலைமை விவசாயகுடிகளின் ஏற்றத்திற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமலே இருந்தது. மறுசீரமைக்கப்பட்ட சீனப் பேரரசின் படைகள், பிரிட்டனாலும், பிரான்சாலும் வழங்கப்பட்ட நவீன ஆயுதங்களைக் கொண்ட பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான மேஜர் கோர்டன் தலைமையில் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. நான்கிங் 1864 இல் மீண்டும் பேரரசோடு இணைக்கப்பட்டது.

**அபினிப்போர்கள்:** சீனாவில் போதைக்கு உள்ளானோரின் இறப்பால் ஏற்பட்ட மனித இழப்பின் அளவு எல்லையை மீறிய போது சட்டத்திற்குப் புறம்பான அபினி வியாபாரத்தை ஒடுக்க சீன அரசு முயன்றது. பிரிட்டிஷ் வணிகர்களே சீனாவில் அபினி விநியோகத்தின் முதன்மை ஆதாரமாக இருந்தனர். முதலாம்

அபினிப்போரின்(1842) இறுதியில் கையெழுத்திடப்பட்ட நான்கிங் உடன்படிக்கை பிரிட்டனுக்கு சீனாவின் கதவுகளைத் திறந்துவிட்டது. சீனா ஹாங்காங்கை விட்டுக் கொடுத்ததோடு இழப்பீடாக ஒருதொகையையும் வழங்கியது.

முதல்போர் சீன அதிகாரிகள் கான்டன் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷாரின் பதிவு செய்யப்பட்ட ஆரோ (Arrow) என்ற கப்பல் ஒன்றின் மாலுமிகளை கள்ளகடத்தல் குற்றத்திற்காக கைது செய்தமைக்காகவே மூண்டது. கப்பல் சீனர்களுக்கு சொந்தமானது என்பதோடு அதில் இருந்த மாலுமிகளும் சீனர்களே. ஆனால் ஹாங்காங் அரசு கொடுத்த அனுமதியின் பெயரில் பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்டிருந்த காலவரம்பும் முடிவடைந்திருந்தது. ஆன போதிலும் ஏதாவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி போர் நெருக்கடி கொடுத்தால் அதன் வாயிலாக அதிக சலுகைகள் பெற்று விடலாம் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த பிரிட்டன் இந்நிகழ்வின் எதிரொலியாக தனது போர்க்கப்பல் ஒன்றை அனுப்பியது. போர் மூண்ட காலகட்டத்தில் தனது நாட்டின் சமயபோதகர் ஒருவர் சீனாவில் கொல்லப்பட்டதாக (பிப்ரவரி 1856) காரணம் காட்டிய பிரான்சும் பிரிட்டனோடு இணைந்துதாக்குதல் தொடுத்தது. இம்முறை பிரிட்டிஷாரையும், பிரெஞ்சுக்காரர்களையும் உள்ளடக்கிய படை பீகிங்கின் கோடைக்கால அரண்மனையைஅழித்தது. இறுதியாக 1860இல் ,சீனா பிரிட்டனின் உயர்வான படைபலத்திற்கு கட்டுப்பட்டு பெய்ஜிங் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது. அது சீனாவின் துறைமுகங்கள் வியாபாரத்திற்கு திறக்கப்படவும், யாங்ட்சே வரை வெளிநாட்டுக் கப்பல்கள் செல்லவும், சமய போதகர்கள் தடையின்றி தங்களுடைய பணியை மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. மிக முக்கியமாக அது சீனாவில் பிரிட்டிஷார் சட்டத்திற்கு உட்பட்டு அபினி வியாபாரம் மேற்கொள்ள வசதி செய்தது.

**பாக்ஸர்கிளர்ச்சி (1899 – 1901):**பாக்ஸர் என்பது ஈஹிகுவான் என்ற சீன இரகசிய சங்கத்தை குறிக்க அயல்நாட்டினர் பயன்படுத்திய சொல்லாகும் (Yihequan எனும் பதம் "நியாயம் மற்றும் ஒருமைப்பாட்டின் கரம்" என்ற பொருள்கொண்டது). பாக்ஸர்கள் பல்வேறு பின்புலத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் பெரும்பான்மையானோர் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஷாண்டுங் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட விவசாயிகளேயாவர். பாக்ஸர்களின் முக்கிய குறிக்கோள் என்பது மஞ்சு வம்சத்தை முடிவிற்குக் கொண்டு வருவதோடு முறை கேடாக சலுகைகளைப் பெற்று வந்த மேற்கத்தியர்களை சீனாவை விட்டுஅப்புறப்படுத்துவதுமாகும். பாக்ஸர்கள் தேவாலயங்களையும், அயல்நாட்டினரின் வீடுகளையும் தீக்கிரையாக்கி கிறித்தவ சமயத்தை தழுவிய சீனர்களைப் பார்த்த இடத்திலேயே கொன்று குவித்தார்கள். பன்னாட்டுப்படை ஒன்று பீகிங் நகரை சூறையாடியதில் பேரரசியும் அவர்தம் அவையாரும் ஓட்டம்பிடித்தனர். ஏறக்குறைய 100,000 மக்கள் மடிந்தனர். இறந்தோரில் பெரும்பான்மையானோர் சாதாரண குடிமக்கள் என்பதும், அதில்ஆயிரக்கணக்கானசீனகிறித்தவர்களும், 200 முதல் 250 வரையான அயல்நாட்டினரும் (பெரும்பாலும் சமயபோதகர்கள்) அடங்குவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

**சன்யாட்–சென் (1866 – 1925)**

ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த டாக்டர் சன்யாட்–சென் ஒரு மிஷன் பள்ளியில் பயின்று பின் மருத்துவரானார். அரசியலில் அவர் கொண்ட ஆர்வம் அவரை கிங் அரசிற்கு எதிரான 1895 ஆம் ஆண்டின் கிளர்ச்சியில் ஈடுபட தூண்டியது. அக்கிளர்ச்சி தோற்றதால் சன்யாட்–சென் அடுத்த பதினாறு ஆண்டுகளை நாடு துறந்து கழிக்கும்படி ஆயிற்று. சீனமாணவர்களிடமும், வெளிநாடுவாழ் சீனர்களிடமும் அவரது புரட்சிகர கருத்துக்களைப் பரப்புவதில் தனது நேரத்தை செலவிட்டார். அவர் 1905 ஆம் ஆண்டு டோக்கியோ நகரில் உருவாக்கிய அரசியல் கட்சி கோமின்டாங் அல்லது தேசியமக்கள்கட்சி என்று ஆனது.

சன்யாட்–சென் மூன்று சித்தாந்தங்களை வலியுறுத்தினார்: தேசியவாதம், ஜனநாயகம் ,மற்றும்சோஷலிஸம். சன்யாட்–சென் 1894 ஆம் ஆண்டு சீன மறுமலர்ச்சி சங்கத்தை உருவாக்கி அதில் அவர்களின் பெருமைக்கு

விதிவிலக்காக சீனா மீது அயல்நாடுகளால் திணிக்கப்பட்ட "சமநிலை மீறிய இரு ஒப்பந்தங்களை" சுட்டிக்காட்டினார். இச்சங்கம் அதிவேகத்தில் வளர்ந்ததோடு அதிக அளவில் இளைஞர்களை ஈர்த்தது. அது 1912 ஆம் ஆண்டு தனது பெயரை கோ–மின்–டாங் என்று மாற்றிக்கொண்டது. இவ்வமைப்பின் உந்து சக்தியாக விளங்கிய சன்யாட்–சென் ஒரு குடியரசை விரும்பினாரேயன்றி அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட மன்னராட்சியை அல்ல.

**மாசே–துங் (1893 – 1976)**

தென்கிழக்கு சீனாவில் அமைந்த ஹுனான் பகுதியில் மாவோ பிறந்தார். அவரது தந்தையார் மஞ்சு அரச வழியின் தீவிர ஆதரவாளர் ஆவார். மாவோ புரட்சி நடந்த ஆண்டில் (1911) சாங்ஷாவில் இருந்த இளையோர் கல்லூரியில் சேர்ந்தார். அவர் புரட்சிப்படையில் சேர்ந்தாலும் சாங்ஷாவில் அமையப்பெற்ற ஆசிரியப்பயிற்சி கல்லூரியில் சேரும் பொருட்டு அதிலிருந்து வெளியேறினார். அங்கே 1918 வரை இருந்த மாவோ நூலகத்தில் நீண்ட நேரத்தினை செலவிட்டார். பின்னர் பீகிங்கிற்குப் பயணப்பட்ட அவர் பீகிங் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகப் பொறுப்பு வகித்தார். அதற்கு அடுத்த ஆண்டு முழுமையான அரசியல் செயல்பாட்டாளராக மாறியமாவோ, ஹுனானில் அமைப்பாளராக பொறுப்பேற்றதோடு தீவிர பொதுவுடைமைவாதியாகவும் உருப்பெற்றார்.

**சரியானவிடையைத்தேர்ந்தெடுக்கவும்.**

1. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போர் உருவாக எது காரணமாக இருக்கவில்லை?

அ) ஜெர்மனியோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நீதியற்றதன்மை

ஆ) பன்னாட்டு சங்கத்தின் தோல்வி

இ) 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்

ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள்

2. கெல்லாக்–பிரையாண்ட் ஒப்பந்தம் _______________ ஆண்டில் கையெழுத்தானது.

அ) 1927

ஆ) 1928

இ) 1929

ஈ) 1930

3. **கூற்று:** ஆயுதக் குறைப்பு மாநாடு பன்னாட்டு சங்கத்தால் ஜெனீவாவில் நடத்தப்பட்டது.

**காரணம்:** பிரான்சுக்கு சமமாக ஜெர்மனி தளவாடங்களை கொண்டிருக்க முயல்வது பேச்சுவார்த்தைகளின் ஒரு முக்கிய அம்சமாக தோன்றியது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

4. சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது?

அ) 1931

ஆ) 1932

இ) 1933

ஈ) 1934

5. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஐரோப்பியக் கண்டத்திற்குள் தொழிற்துறையில் வலிமையான சக்தியாக ______________ நாடு உருவாகியிருந்தது.

அ) பிரான்ஸ்

ஆ) ஸ்பெயின்

இ) ஜெர்மனி

ஈ) ஆஸ்திரியா

6. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளின் படி ஜனவரி 1935 இல் ____________ பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முடிவானது.

அ) சூடட்டன்லாந்து

ஆ) ரைன்லாந்து

இ) சார்

ஈ) அல்சேஸ்

7. **கூற்று:** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.

**காரணம்:** அகழிப்போர் முறை ஒதுக்கப்பட்டு விமானகுண்டு வீச்சு பிரபலமானது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்றுதவறு. காரணம்சரி.

8. ஜெர்மனி 1939 இல் ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை __________ நாட்டோடு ஏற்படுத்திக் கொண்டது.

அ) ஆஸ்திரியா

ஆ) இத்தாலி

இ) ரஷ்யா

ஈ) பிரிட்டன்

9. பேர் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ____________ ஆவார்.

அ) யாமமோடோ

ஆ) ஸ்கூஸ்னிக்

இ) இரண்டாம் கெய்சர் வில்லியம்

ஈ) ஹிரோஹிடோ

10. குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கடன் –குத்தகை முறை ________ வகையில் உதவிபுரிந்தது.

அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்

ஆ) யூதர்களை ஹிட்லரின் படைகள் கட்டவிழ்த்து விட்ட கொலை வெறித்தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்.

இ) தோழமை நாடுகளின் வளங்களைப் பெருக்கி, அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் வழங்குதல்.

ஈ) இரண்டாம் உலகப்போரில் காயமடைந்தோருக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்.

11. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942 இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழி நடத்தியவர் ___________ ஆவார்.

அ) மெக் ஆர்தர்

ஆ) ஐசன் ஹோவர்

இ) ஜெனரல் டிகால்

ஈ) ஜார்ஜ் மார்ஷல்

12. ஜப்பானிய கடற்படையை அமெரிக்க ஐக்கிய நாட்டின் கடற்படை தோற்கடித்தமை ____________ போரிலாகும்.

அ) பிரிட்டன்

ஆ) குவாடல்கனல்

இ) எல்அலாமின்

ஈ) மிட்வே

13. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது ___________ என்னுமிடத்தில் ஆகும்.

அ) போட்ஸ்டாம்

ஆ) எல்அலாமின்

இ) ஸ்டாலின்கிராட்

ஈ) மிட்வே

14. கீழ்க்காண்பனவற்றுள் போட்ஸ்டாம்மா நாட்டின் அறிவிப்புகளில் அடங்காத ஒன்று எது?

அ) கிழக்கு ரஷ்யா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்: அதில் வடக்குப் பகுதி சோவியத் நாட்டையும், தென்பகுதி போலந்தையும் சென்று சேரும்.

ஆ) முன்பு சுதந்திர நகரமாக இருந்த டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சேர்க்கப்படும்.

இ) ஜெர்மனி நான்கு தொழில் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பிரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் முறையே சோவியத்நாடு, பிரிட்டன், அமெரிக்கஐக்கியநாடு, பிரான்ஸ் ஆகியவைகளின் கட்டுப்பாட்டில் விடப்படும்.

winmeen.com

ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பதென்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது.

15. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் சேராத ஒன்று எது?

அ) இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவிலிருந்த பல முடியரசுகளுக்கு மரண அடி கொடுத்தது.

ஆ) பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை உருவாக்கியது.

இ) பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது.

ஈ) அமெரிக்க ஐக்கிய நாடும், சோவியத்நாடும் இரு வல்லரசுகளாக உருவெடுத்தன.

16. கீழ் பொருத்தப்பட்டிருப்பவையில் சரியான இணைகள் எது?

1) ஜெனரல்டிகால் – பிரான்ஸ்

2) ஹேல்செலாஸி – எத்தியோப்பியா

3) ஜெனரல் படோக்லியோ – ஜப்பான்

4) அட்மிரல் யாம்மோடோ – இத்தாலி

அ) 1 மற்றும் 2

ஆ) 2 மற்றும் 3

இ) 3 மற்றும் 4

ஈ) அனைத்தும்

17. பிரான்ஸ் இரண்டாம் அபினிப் போரில் பங்கெடுத்தது

அ) பிரிட்டனுக்கு உதவி புரிவதற்காக

ஆ) பிரான்சுக்கென தனி செல்வாக்கின் கோளத்தை உருவாக்கிக் கொள்வதற்காக

இ) சமய செயல்பாடுகளுக்கு அனுமதிகோரும் பொருட்டு

ஈ) ஒபியவணிகத்தில் ஈடுபடும் உரிமையை பிரான்ஸ் நாட்டினர் நிலைநாட்டினர் நிலைநாட்டுவதற்காக

18. மஞ்சு வம்சத்தின் காலம் ____________ஆண்டு வரை நீடித்தது.

அ) 1908

ஆ) 1911

இ) 1912

ஈ) 1916

19. ஸ்பானிய –அமெரிக்கப் போர் _____________ சர்ச்சையை முன்னிறுத்தி 1898 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

அ) கியூபா

ஆ) பிலிப்பைன்ஸ்

இ) போர்டோரிக்கோ

ஈ) படாவியா

20. **கூற்று:** பிலிப்பைன்ஸ் 4 ஜூலை 1946 ஆம் ஆண்டு விடுதலையடைந்தது.

**காரணம்:** அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழான தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்தது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள் 2. ஆ) 1928 3. இ) கூற்று சரி, காரணம் தவறு 4. அ) 1931 5. இ) ஜெர்மனி 6. இ) சார் 7. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 8. இ) ரஷ்யா 9. அ) யாமமோடோ 10. அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல் 11. அ) மெக் ஆர்தர் 12. ஈ) மிட்வே 13. இ) ஸ்டாலின்கிராட் 14. ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பதென்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது. 15. இ) பாசிச வாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது. 16.அ) 1 மற்றும் 2 17. இ) சமய செயல்பாடுகளுக்கு அனுமதி கோரும் பொருட்டு 18. இ) 1912 19. அ) கியூபா 20. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

## [15] இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

1952 நவம்பர் 1இல் பசுபிக் பகுதியின் மார்ஷல் தீவுகளில் எலுஜெலாப் அட்டோல் எனுமிடத்தில் அமெரிக்கா, 'மைக்' எனப் பெயரிடப்பட்ட உலகின் முதல் ஹைட்ரஜன் அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், 1955 நவம்பர் 22 இல் சோவியத் யூனியன் தனது முதல் ஹைட்ரஜன் குண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது.

போரின் விளிம்பு வரை செல்வதென்பது, ஒரு நிகழ்வு, தனக்குச் சாதகமாக முடிய வேண்டும் என்பதற்காக ஆபத்தான நிகழ்வுகளை உண்மையான போர் நடைபெறுவதற்கான விளிம்பு வரை நகர்த்திச் செல்வதாகும். பன்னாட்டு அரசியலில், வெளியுறவுக் கொள்கைகளில், இராணுவ உத்திகளில் இது இடம் பெறுகின்றது. இது அணு ஆயுதப் போர் குறித்த அச்சத்தையும் உள்ளடக்கியதாகும்.

நேருவின் பஞ்சசீலக் கொள்கை:

1) நாடுகளிடையே இறையாண்மை, எல்லைப் பரப்பு குறித்த பரஸ்பரமரியாதை

2) பரஸ்பரம் ஆக்கிரமிப்பு இல்லாத நிலை

3) பரஸ்பரம் ஒரு நாடு மற்றொன்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருத்தல்

4) சமத்துவம் மற்றும் பரஸ்பரநன்மை

5) சமாதான சகவாழ்வு

"போர்கள் மனிதர்களின் மனங்களிலிருந்து தொடங்குவதால் அம் மனிதர்களின் மனங்களில் தான் அமைதிக்கான பாதுகாப்புகளும் கட்டுப்பட வேண்டும்" (ஐ.நா.சபை சாசனத்தின் முகவுரை)

**பாலஸ்தீன விடுதலை இயக்கம்:** 1964 க்கு முன்பு இரகசிய எதிர்ப்பியக்கங்களாக செயல்பட்ட பல்வேறு பாலஸ்தீனக் குழுக்களை ஒருங்கிணைப்பதற்காக பாலஸ்தீன் விடுதலை இயக்கம் (Palestine Liberation Organisation – PLO) 1964 இல் உருவாக்கப்பட்டது. 1967 ஜூனில் நடைபெற்ற அரபு– இஸ்ரேல் போருக்குப் பின்னர் இவ்வமைப்பு முக்கியத்துவம் பெற்றது. 1990 களில் அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு 1980 கள் முடிய PLO இஸ்ரேலுடன் நீண்ட நெடிய தற்காப்பு கொரில்லாப் போர்களில் ஈடுபட்டிருந்தது. யாசர் அராபத் இவ்வமைப்பின் மகத்தான தலைவராவார்.

போரிஸ் யெல்ட்சின் (1931 – 2007) 1961 இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்த இவர் 1968 இல் கட்சியின் முழு நேர ஊழியரானார். எழுபதுகளில் பரவலாக அறியப்பட்டவரான இவர் கட்சியில் முக்கியப் பதவிகளை வகிக்கத் தொடங்கினார். கோர்பசேவ் பதவிக்கு வந்த பின்னர் அவர் மாஸ்கோ கட்சி அமைப்பிலுள்ள ஊழல்களைக் கலைவதற்காக போரிஸ்யெல்ட்சினை(1985) தேர்ந்தெடுத்தார். 1986 இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் (சோவியத் யூனியனின் உயர்மட்ட கொள்கை முடிவு செய்யும் அமைப்பு) உறுப்பினராக உயர்த்தப்பட்டார். விரைவில் அவர் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார். கட்சி கூட்டங்கள் சீர்திருத்தப் பணிகள் மிக மெதுவாக நடைபெறுவதாக இவர் விமர்சனம் செய்ததால் கோர்பச்சேவின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும், பொருளாதாரம் சீர்திருத்தப்பட வேண்டும் எனும் கருத்துக்களை அவர் முன் வைத்ததால் சோவியத் வாக்காளர்களிடையே பிரபலமானார். 1989 மார்ச்சில் சோவியத் யூனியனின் புதிய பாராளுமன்றமான மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார். ஓராண்டுக்குப் பின்னர், 1990 மே 29 இல் கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம் யெல்ட்சினை ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவரே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991 இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்தலைவரானார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. 1947இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருந்த ஒரேநாடு ____________

அ) கிழக்கு ஜெர்மனி

ஆ) செக்கோஸ் லோவாக்கியா

இ) கிரீஸ்

ஈ) துருக்கி

2. **கூற்று:** ஸ்டாலின் சர்ச்சிலை ஒரு போர் விரும்பி என விமர்சித்தார்.

**காரணம்:** கம்யூனிசத்திற்கு எதிராக மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டு சேர வேண்டுமென சர்ச்சில் முன்னதாக அழைப்பு விடுத்திருந்தார்.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

3. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்

அ) பெர்னாட் பரூச்

ஆ) ஜார்க் ஆர்வெல்

இ) ஜார்க் கென்னன்

ஈ) சர்ச்சில்

4. **கூற்று:** மார்ஷல் திட்டத்தை "டாலர் ஏகதிபத்தியம்" என சோவியத் வெளியுறவுத்துறை அமைச்சர் இகழ்ந்தார்.

**காரணம்:** சோவியத்தின் கண்ணோட்டத்தில் மார்ஷல் திட்டமென்பது அமெரிக்காவின் செல்வாக்கைப் பரப்புவதற்கான சூழ்ச்சியே ஆகும்.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

5. மார்ஷல் உதவித் திட்டத்தின் குறிக்கோள் ____________

அ) ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறு கட்டுமானம் செய்வது

ஆ) முதலாளித்துவத் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பது

இ) ஐரோப்பாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவது

ஈ) சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக இராணுவக் கூட்டமைப்பை உருவாக்குவது.

6. ட்ருமன் கோட்பாடு ____________ பரிந்துரைத்தது

அ) கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவு

ஆ) காலனிகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது

இ) கிழக்கு ஐரோப்பிய நாடுகளின்உள் விவகாரங்களில் தலையிடுவது

ஈ) அமெரிக்கத் தளபதியின் தலைமையின் கீழ் ஐ.நாசபைக்கு நிரந்தரப் படையை உருவாக்குவது

7. கீழ்க்காண்பனவற்றை காலவரிசைப்படி ஒழுங்கு செய்யவும்.

1) வார்சா உடன்படிக்கை

2) சென்டோ

3) சீட்டோ

4) நேட்டோ

அ) 4 2 3 1

ஆ) 1 3 2 4

இ) 4 3 2 1

ஈ) 1 2 3 4

8. _______________ பாக்தாத் உடன்படிக்கையின் குறிக்கோளாக இருந்தது.

அ) மத்திய கிழக்கில் இங்கிலாந்தின் தலைமையைப் பாதுகாப்பது

ஆ) அப்பகுதி சார்ந்த எண்ணை வளங்களைச் சுரண்டுவது

இ) கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுப்பது

ஈ) ஈராக் அரசை வலிமை குன்றச் செய்வது

9. லெபனானில் அமெரிக்கா தலையிட்டதை ___________ எதிர்த்தது.

அ) துருக்கி

ஆ) ஈராக்

இ) இந்தியா

ஈ) பாகிஸ்தான்

10. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் _________ ஆவார்.

அ) ஆல்பிரட்சாவே

ஆ) மார்ஷல்

இ) மோலோடோவ்

ஈ) ஹாரிட்ரூமன்

11. பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியானதைத் தேர்வு செய்க.

| | |
|---|---|
| அ) இந்தோனேசியா | 1. ஜவகர்லால் நேரு |
| ஆ) எகிப்து | 2. டிட்டோ |
| இ) கானா | 3. குவாமி நுக்ருமா |
| ஈ) யுகோஸ்லோவியா | 4. கமால் அப்துல் நாசர் |
| உ) இந்தியா | 5. சுகர்னோ |

| | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| அ) | 5 | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 | 5 |
| இ) | 5 | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 | 5 |

12. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ________ல் நடைபெற்றது.

அ) பெல்கிரேடு

ஆ) பெய்ஜிங்

இ) பாண்டுங்

ஈ) பாலி

13. **கூற்று:** பன்னாட்டு சங்கம் ஒரு தோல்வி என்பதை இரண்டாம் உலகப்போர் நிரூபித்தது.

**காரணம்:** மற்றொரு போர் ஏற்படா வண்ணம் தடுக்க ஒரு சக்தி வாய்ந்த அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தனர்.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

14. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24 இல் ___________ உருவானது.

அ) 100 உறுப்பினர்களுடன்

ஆ) 72 உறுப்பினர்களுடன்

இ) 51 உறுப்பினர்களுடன்

ஈ) 126 உறுப்பினர்களுடன்

15. பின்வரும் கூற்றுகளில் எக்கூற்றுகள் சரியானவை?

**கூற்று I:** ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பனிப்போரின் தொடக்கத்துடன் ஒருங்கே நடைபெற்றது.

**கூற்று II:** பனிப்போர் காலக்கட்டத்தில், போர்கள் நிகழாமல் தடுப்பதில் ஐ.நா சபை முக்கிய பங்காற்றியது.

**கூற்று III.** பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்புடைய பிரச்சனைகளில் ஐ.நா. சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது.

அ) I, II

ஆ) II, III

இ) I, III

ஈ) மேற்கூறப்பட்ட அனைத்தும்

16. சூயஸ் கால்வாய் செங்கடலை ______________ இணைக்கிறது.

அ) ஏடன் வளைகுடாவுடன்

ஆ) காம்பே வளைகுடாவுடன்

இ) மத்திய தரைக்கடலுடன்

ஈ) அரபிக் கடலுடன்

17. ஐ.நா சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வேலை __________ சேர்ந்தவராவார்.

அ) பர்மா

ஆ) ஜப்பான்

இ) சிங்கப்பூர்

ஈ) நார்வே

18. **கூற்று:** 2017இல் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியே செல்வதாக (Exit) அறிவித்தது.

**காரணம்:** பிரிட்டனின் வெளியேற்றம் 'பிரெக்ஸிட்' (Brexit) என அழைக்கப்படுகிறது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

19. கிளாஸ் நாஸ்ட் குறிப்பது _________

அ) ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை

ஆ) சோவியத் கம்யூனிச கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை

இ) சோவியத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை

ஈ) பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதை

20. சோவியத் யூனியன் ___________இல் சிதறுண்டது.

அ) நவம்பர் 17, 1991

ஆ) டிசம்பர் 8, 1991

இ) மே1, 1991

ஈ) அக்டோபர் 17, 1991

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ஆ) செக்கோஸ்லோவாக்கியா 2. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 3. அ) பெர்னாட் பரூச் 4. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 5. அ) ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறு கட்டுமானம் செய்வது 6. அ) கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவு 7. இ) 4 3 2 1 8. இ) கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுப்பது 9. ஆ) ஈராக் 10. அ) ஆல்பிரட்சாவே 11. இ)5 4 3 2 1 12. அ) பெல்கிரேடு 13. அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 14. இ) 51 உறுப்பினர்களுடன் 15. ஈ) மேற்கூறப்பட்ட அனைத்தும் 16. இ) மத்திய தரைக்கடலுடன் 17. ஈ) நார்வே 18.அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. 19. அ) ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை 20. ஆ) டிசம்பர் 8, 1991